# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 30 புதன்கிழமை (14.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 108


# வடக்கு - கிழக்கில் நிலைமை மிகவும் மோசம்; கண்காணிப்புக் குழு அதனைத் தணிக்க உதவும்

## பாதிக்கப்படுவோர் பொதுமக்களே என்கிறார் மூத்த அதிகாரி

கொழும்பு,மார்ச்14

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மிகவும் மோசமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு பதற்றமான நிலை காணப்படுகிறது. இந்த நிலைமை நீடித்தால் அபாயகரமான நிலை தோன்றும்.

மோதல்களை நிறுத்தி பதற்றத்தைத் தணித்து மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதில் இரு தரப்புகளுக்கும் உதவுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் கண்காணிப்புக்குழு தயாராகவுள்ளது.

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கின் சகல முன்னரங்க நிலைகளிலும் இராணுவமும், விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் ஷெல் வீச்சுக்களை நடத்திவருகின்றனர். அதனால், அப்பகுதிகளில் வாழும் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மக்கள் இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கியமும் ஏற்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் அச்சத்தின் மத்தியிலேயே வாழ்கின்றனர். வன்முறைகள் மற்றும் ஷெல் வீச்சுக்களால் பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பொது மக்கள் காயமடைவதோடு சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இது மிக அபாயமான நிலையாகும். இந்நிலை மேலும் தொடர்ந்தால் மிகப் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். பொது மக்கள் இன்னும் அதிகமாக பாதிப்புக்குள்ளாவார்கள்.

கடுமையான ஷெல் வீச்சுக்களால் மட்

(04 பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் விடயத்தை ஐ.தே.க. சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும்

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேசத்துக்கும் தெரிவிக்கும் வகையில் அவ்விடயத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்ல பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தீர்மானித்திருக்கின்றது. கட்சித் தலைமை இது குறித்துத் தீர்மானித்திருப்ப தாக அறிய வருகின்றது.

"இலங்கையில் ஆட்கடத்தல், மிரட்டிக் கப்பம்வசூலித்தல், ஆட்களைக்கடத்திக் காணாமற் போகச்செய்தல், படுகொலைகள் போன்ற மிகமோசமான மனித உரிமை மீறல்சம்பவங்கள்இடம்பெற்றுவருகையில், அவ்விடயம் தொடர்பாகப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் தனது கடமையை முழுக் கடப்பாட்டுடன் நிறைவு செய்ய வேண்டியிருப்பதை ஐ.தே.க. உணர்ந்

(04 பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்ய பஸில் ராஜபக்ஷ ஜெனிவா சென்றாராம்!

### மூன்று கோரிக்கைகளுக்கு அரசு இணங்கியதாக ஐ.தே.க. தகவல்

கொழும்பு, மார்ச் 14

விடுதலைப்புலிகளின் மூன்று முக்கிய கோரிக்கைகளுக்கு இணங்கியே அரசு அவர்களோடு இரகசிய ஒப்பந்தம் செய்தது. இந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்காக ஜனாதிபதியின்சகோதரர்பஸில் ராஜபக்ஷ ஜெனிவா சென்றார்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்

★ கருணாவின் செயற்பாடுகளை முற்றாக ஒழித்தல்-

★ கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள புலிகளின் ஆயுதக் களஞ்சியங்கள் மீது தாக்குவதைத் தவிர்த்தல் -

★ புலிகளுக்கு நிதி உதவி வழங்குதல் -

ஆகிய மூன்று கோரிக்கைகளுக்கு உடன்பட்டே அரசு புலிகளுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்தது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

அவர் செய்தியாளர் மாநாட்டில் மேலும்

(04 பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, மார்ச் 14

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜொகான் சொல்பேர்க் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் இத் தகவலை வெளியிட்டார்.

இது நடைமுறையில் உள்ள வழமையான சந்திப்பு என்றும், தற்போதைய நிலைவரங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் காண்காணிப்புக் குழுவின் தலைவர் கலந்துரையாடுவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## கிழக்கில் இடம்பெயரும் தமிழ் மக்களின் அவலம் ஜேர்மன் தூதுவரின் கவனத்துக்கு

கொழும்பு, மார்ச்14

ஆட்கடத்தல்கள், கொலைகள் மற்றும் மட்டு. மாவட்டத்தில் கண்மூடித்தனமாக ஷெல்வீச்சு நடத்தி தமிழ்மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களை விட்டு வெளியேற்றுதல் குறித்து இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் எடுத்து விளக்குவதாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ஜென் வீர்த் நேற்று தம்மைச்சந்தித்த மக்கள் கண்காணிப்பு குழுவினரிடம் உறுதியளித்துள்ளார்.

இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் சந்திக்கும் ஒரு கூட்டம் நேற்று மாலை கொழும்பில் நடைபெறவிருந்தது.

அதனை முன்னிட்டு மக்கள் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த மனோ கணேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன், லக்ஷ்மன் கிரி

(04 பக்கம் பார்க்க)

## கைதிகளின் உண்ணாவிரதம் இடைநிறுத்தம் நீதி அமைச்சருக்கு 3 வார கால அவகாசம்

கொழும்பு, மார்ச் 14

வெலிக்கடை புதிய மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவந்த 42 தமிழ் கைதிகளும் தமது உண்ணாவிரதத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர். தமது கோரிக்கைகளுக்கு நீதி அமைச்சர் டிலான் பெரேரா நேரடியாக வந்து பதில் அளிப்பதற்கு அவர்கள் மூன்று வார கால அவகாசம் கொடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதிகளை சந்தித்துப் பேசியதன் பின்னரே இவர்கள் தமது உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டனர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேத்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

எந்தவிதமான விசாரணைகளும் இன்றி சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்திவந்தனர்.

(03 பக்கம் பார்க்க)

## இலங்கை நிலையை நேரில் பார்வையிட ஐ.நா. அதிகாரிகளுக்கு அரசு அழைப்பு

ஜெனிவா, மார்ச் 14

இலங்கையில் மனித உரிமைமீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நேரில் பார்வையிடுமாறு ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரிவின் அதிகாரிகளுக்கு அரசு அழைப்பு விடுத்திருக்கிறது.

'மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாம் செயற்திறன் மிக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனவும் சித்திரவதைகளுக்கான சிறப்பு பிரதிநிதியும் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகளுக்கான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியும் சிறிலங்காவிற்கு சென்று நிலைமைகளை பார்வையிட வேண்டும்' என சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

ஜெனிவாவில் உள்ள பலைஸ் டெஸ் நேசனில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நான்காவது கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க உரையாற்றியிருந்தார். தனது உரையிலேயே அமைச்சர் இந்த அழைப்பை விடுத்தார்.

அங்கு அவர் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்தப் பிரதிநிதிகளின் வருகையினால் ஒரு காத்திரமான பரிந்துரை கிடைக்கும் என அரசாங்கம் நம்புகின்றது. செயற்திறன் மிக்க ஓர் உறுப்பினர் என்ற முறையில் சிறிலங்கா தனது வெளிப்படையான வலுவான தொடர்பாடல்களை இந்தச் சபையுடன் கொண்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் எழுப்பப்பட்ட போதே அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் இரு உறுப்பினர்களுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

(04 பக்கம் பார்க்க)

## தொப்பிகலவில் 2ஆவது நாளாகவும் விமானத் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 14

தொப்பிகல பிரதேசத்தில் நேற்றும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாவது நாளாகவும் கிபிர் விமானங்களும் மிக் - 27 ரக விமானங்களும் அடையாளம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு முகாமையும் பயிற்சித் தளத்தையும் தாக்கியதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தொப்பிலகவில் உள்ள நாரமுல்ல என்ற இடத்தில் இருந்த பயிற்சித் தளமும் உளவுப் பிரிவின் முகாமும் அழிக்கப்பட்டதாகவும் இரண்டு நாள்களிலும் மொத்தம் 11 விடுதலைப் புலிகள் பலியானதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றும் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத் துறைத் தலைவர் உயிரிழந்ததாகக் கூறப்படுவது சுத்தப் பொய் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## தமிழகம் சென்ற அகதிகளுக்கு அடையாள அட்டைகள்

சென்னை, மார்ச் 14

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளில் தமிழகப் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களுக்கே அடையாள அட்டைகள் வழங்கப்படும். முகாம்களுக்கு வெளியே வசிப்போருக்கு அவை வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அகதி முகாம்களில் தங்கியுள்ள 12 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் அவர்கள் குறித்த முக்கிய விவரங்கள் பொறிக்கப்பட்ட அடையாள அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்தார்.

அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் வரை 19,000 இற்கும் மேற்பட்ட அகதிகள் தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். (அ)

## ஊரடங்கு ஒருமணிநேரம் தளர்வு

யாழ்ப்பாணம், மார்ச்14

குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் இன்று புதன்கிழமை இரவு 8 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை நடைமுறையில் இருக்கும் என யாழ். பாதுகாப்புத் தலைமையகம் இத்தகவலை நேற்றிரவு அறிவித்தது.

நேற்றிரவு 8 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என்றும் -

இன்று இரவு 8மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்கு நாளை காலை 4 மணிக்கு நீக்கப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மடுவில் நேற்று கிளைமோர் பொதுமக்கள் 2 பேர் பலி

மன்னார், மார்ச், 14

மன்னார், - மடுவில் உள்ள சின்னாவில் பகுதியில் நேற்றுநண்பகல் இடம்பெற்ற கிளைமோர் வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு பொதுமக்கள் மரணமானார்கள்.

நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சின்னாவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரே கிளைமோரில் சிக்கி உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது. எனினும் உயிரிழந்தவர்கள் யார் என்பது அடையாளம் காணப்படவில்லை. (ஐ)


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.03.2007வியாழக்கிழமை
பேராதனைப் பல்கலைக்
கழகத்தில் வணிகமாணி
பட்டம்பெறும்

**திருமதி**
**ரமணப்பிரியா குகப்பிரசாதன்**

அவர்களை மேலும் பல
பட்டங்கள் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்.

செ.சீவரத்தினம்,
திருமதி சீ.கலாநிதி,
சீ.கோவர்த்தனன்,
சீ.குயின்சிகா.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை. (58754)

## Médicins Sans Frontiéres (MSF) - France

**MSF** is an International independent humanitarian medical aid agency committed to two objectives:provoding medical aid wherever needed, regardless of race, religion, politics or sex and raising awareness of the plight of the people we help.

### VACANCY

**Position : Nurse**

We are looking for a skilled, energetic and dynamic person to suit the above position to our office in Point Pedro. The Nurse will work with the medical team in the project of hospitals, as well as medical translator.

**Skills required:**

* Excellent communication skill in English.
* Good interpersonal skill.
* Diploma/Cetificate in Nursing.
* Previous working experience in Operation Theatre would be advantageous.

Please forward your CV along with contact phone numbers and two non - related referees to the following address before 23rd March 2007.

Field Coordinator,
Médicins Sans Frontiéres (MSF) - France
Manthikai,
Point Pedro. (58772)

## முக்கிய அறிவித்தல்

திருமதி V.M. பரமநாதன் கமலாம்பிகை ஆகிய எனக்கு உரிமையான யாழ்ப்பாணம் சத்திரச்சந்தி, K.K.S.றோட், 102ஆம் இலக்கக் கடைக் கட்டடத்தை வாடகைக்கு எவரும் என்னைத்தவிர வேறு நபர் மூலம் ஒப்பந்தம் செய்யவேண்டாம் என்றும் அதனால் ஏற்படும் சட்ட பிணக்குகளுக்கு நான் பொறுப்பாளி அல்ல எனவும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(58633) **ப.கமலாம்பிகை.**

## பதவி வெற்றிடம்

காப்புறுதித்துறையில் முன்னணி நிறுவனத்தின் யாழ். கிளைக்கான வெற்றிடங்கள்

பதவி: காப்புறுதி பிரதிநிதி (Insurance Representative)
தகைமை: 1. G.C.E. (O/L)
(கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி)
2.ஏற்கனவே காப்புறுதி நிதித்துறையில் முன் அனுபவம் உள்ளவரும் சந்தைப்படுத்தல் முன் அனுபவமும் உள்ளவரும் விண்ணப்பிக்கலாம்.

அத்துடன்
* உழைப்புக்கு ஏற்ற கவர்ச்சிகரமான ஊதியம்
* வாகன கடன் வசதி
* வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகள் என்பனவும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 20.03.2007 இற்கு முன்னர் Bio - data ஐ நேரில் அல்லது தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

C/O உதயன் பணிமனை,
(58761) விளம்பர இல. 2956

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை பொன்னம்மா



வேளாதோப்பு, இருபாலையைப் பிறப்பிடமாகவும் செங்குந்த வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பொன்னம்மா 12.03.2007 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் நெசவு ஆசிரியர் ஐயாத்துரையின் அன்புத் துணைவி ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (58770) தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

T.V.S CENTRA N.PJZ9..... தொடரிலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (4.500KMஓடியது. லீற்றருக்கு 80KM ஓடக் கூடியது)

யோகா,
(58758) 78,K.K.S. ROAD, சுன்னாகம்.

## விற்பனைக்கு

PhotoCopy Machine with Printer,Ladies Motor bike,Office Table, Fridge ஆகிய பல பொருள்கள் விற்பனைக்குண்டு.
2 p.m. -5.p.m. T.P.: 222 6666 (58758)

## கார் விற்பனைக்கு

**தனிப்பாவனையிலுள்ள புதிய நீல நிற INDIGO - GLX - TATA - KA XXXX தொடர் இலக்கக் கார் விற்பனைக்குண்டு**

**தொடர்பு: தொ.பே: 0777734339** (Ã52193)

## தவறிவிட்டது

முருகவேல் முத்துலிங்கம் என்பவருடைய தே.அ.அட்டை (740755307V) நாவலர் வீதிக்கும் போதனா வைத்தியசாலைக்கும் இடையில் 12.03.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776092064 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

தெல்லிப்பழை துர்க்காபுரம் எனும்முகவரியைக்கொண்ட சின்னத்தம்பி ரதிதேவி என்பவரது தே.அ.அட்டையும்(776553700V), வி.அ. அட்டையும் (0907013676) கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் கைதடிக்குமிடையே தவறிவிட்டன. அதனைக் கண்டெடுத்தவர்கள் கைதடி சந்தியிலுள்ள நியூ லீலாவதி ஸ்ரோர்ஸ் அல்லது 0776155443 என்னும் தொலைபேசியினூடாகவோ தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (58762)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் வீதி ஆரம்பத்தில் 3பரப்பு காணியில் கடைக் கட்டடத்துடன், வளவு வருமானத்துடனும் சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு.**
**தொடர்பு:- தொ.பே. 0773151530**
(இரவு 7 மணிக்குப் பின் 0212225738)

## விற்பனைக்கு

1. 5 K.W டீசல் ஜெனரேற்றர்
2. குளிரூட்டி (A.C)
3. ஒரே தடைவையில் 9CD பதிவு செய்யக் கூடிய மல்ரி (Multy) றைற்றர்
4. ஒரே தடவையில் 5 கசட் பதிவு செய்யக் கூடிய றெக்கோடர்
5. CD பிறின்டர்
6. VHS டெக் என்பன விற்பனைக் குண்டு.

இல. 141B, பலாலி வீதி, (தபால் பெட்டிச் சந்தி),
திருநெல்வேலி. 021 222 4257

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் லூ.ப.மனோகரன், ஆசிரியை திருமதி செ.எட்வின் பிரிஸ் ஆகியோரது அன்புத் தந்தை

**வைத்தி லூக்காஸ்**

அவர்கள் 12.03.2007 திங்கட்கிழமை காலமானார். இவரின் மறைவினால் துயரடையும் அன்னாரின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா
றோ.க.த.க. பாடசாலை. (58768)

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு கிருஷ்ணசாமி



கல்வியங்காடு, கலைமகள் வீதியைச் சேர்ந்த குழந்தைவேலு கிருஷ்ணசாமி 12.03.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லக்சுமியின் அன்புக் கணவரும் நந்தினி, சாந்தினி (வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ்), இலக்ஷினி, யோகபாலன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன்ராஜ்(சவுதி), மகிந்தன்(மஜிக் வீடியோ), ரவிக்குமார் (சவுதி) ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரனுஜா, தேனுகன், ரஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கலைமகள் வீதி, பேரமகன்
கல்வியங்காடு. ராஜா,
(58784) குடும்பத்தினர்.

## NIIT தகவல் தொழில்நுட்ப B.Sc. பட்ட நெறி

ஆசியாவின் மிகப்பெரிய கணனிப்பயிற்சி நிறுவனமாக விளங்கும் NIIT இன் ஊடாகச் சர்வதேசப் பல்கலைக்கழகங்களின்

**தகவல் தொழில்நுட்ப B.Sc. பட்டம்**

3வருடங்களில் பெறுவதற்கு இன்றே NIIT உடன் இணையுங்கள்.
**NIIT இன் குறுகியகாலக் கற்கை நெறிகளிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

| PROGRAM | DURATION |
|---|---|
| DNIIT | 2 Years |
| VB.NET | 48 hrs |
| ASP.NET | 48 hrs |
| Java Programming | 48 hrs |
| Enterprise Java | 72 hrs |
| XML | 32 hrs |
| C++ & Linux | 66 hrs |
| MS Office | 42 hrs |
| Dream Weaver | 16 hrs |

அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன. சகல கற்கை நெறிகளுக்குமான பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.
ONLINE கற்பித்தல் வசதி உபயோகிக்கப்படும்.

**NIIT**, 347 2/1, Kasthuriyar Road, Jaffna.
T.P.021 222 7250. (அ-52190) www.niit.com

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 05 - 1938 | 14 - 03 - 2001 |

**திருமதி வல்லிபுரம் இராசமணி**

ஆண்டு ஆறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு மட்டும் மறையவில்லையம்மா
எங்கு பார்த்தாலும் உனது திருமுகம் தெரியுதம்மா
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

தகவல்:
க.வல்லிபுரம் (கணவர்),மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

சாந்தை,
பண்டத்தரிப்பு. (58777)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (12.02.2007)திங்கட்கிழமை சிவபதமடைந்த எமதுகுடும்பத் தலைவி

**திருமதி**
**கனகரத்தினம் அன்னபூரணம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.03.2007)புதன்கிழமை மு.ப. 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள்குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 190,
காதிஅபூபக்கர் வீதி,யாழ்ப்பாணம். (58744)

ஜெ.புஸ்பராணிகுடும்பத்தினர்.
(பேர்த்தி).

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 * 10 * 1949 | 23 * 02 * 2006 |

**அமரர் இரத்தினம் வாமதேவன்**

தரணியில் நாம் வாழ வழிகாட்டி
நம் உயர்விற்கு வித்திட்ட தந்தையே!
இறைவனுக்கு ஏற்றிய தீபம் அணையமுன்
நம் இல்லத்து ஒளித்தீபம் அணைந்ததுவோ
ஆலமரம் போல் நிழல் தந்தவரே
எம் நெஞ்சமெலாம் நிறைந்த தந்தையே
ஏன் இந்த அவசரம் உங்களிற்கு
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் இன்று (14.03.2007) புதன்கிழமை ந.ப. 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொட்டிலடி, சங்கானை.
தொ.பே :- 222 5694.

குடும்பத்தினர்.
(58705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நு.: 222 9944

# காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் திடீரெனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை அழைத்துப் பேசியமை பல்வேறு ஊகங்களுக்கு வழி சமைத்திருக்கின்றது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் பௌத்த - சிங்களத் தீவிரப் போக்கைக் கடைப்பிடித்து, வடக்கு - கிழக்கில் இராணுவ முனைப்புடன் விடயங்களைக் கையாண்டு வருவதால் ஜனாதிபதி மஹிந்தருக்கு தென்னிலங்கையில் செல்வாக்கு அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி, ஜனாதிபதித் தேர்தலை அடுத்து, உடைந்து துண்டாகி, பலமிழந்து, தடுமாறிப்போய் நிற்கிறது. அதேசமயம், தமது ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அரசல் புரசலாக ஆரம்பித்திருக்கும் உட்கட்சிப் பூசலையும், கட்சித்தலைமைக்கு எதிரான கிளர்ச்சியையும் ஜனாதிபதி எதிர்கொள்கிறார்.

தமது செல்வாக்கு வளர்ந்து, எதிர்க்கட்சிகள் பலமிழந்து தடுமாறும் சமயத்தில் ஒரு திடீர்ப் பொதுத்தேர்தலை நடத்தி நாடாளுமன்றப் பலத்தை உறுதிப்படுத்திக்கொண்டால், கட்சிக்குள் தமக்கு எதிராகக் கிளம்பும் புகைச்சலையும் ஒரேயடியாக அமுக்கி விடலாம் எனக் கருதுகிறார் போலும் ஜனாதிபதி.

அதனால்தான் அவரது தந்திரோபாயச் சிந்தனை பொதுத்தேர்தல் குறித்துச் சிரத்தை காட்டுகின்றது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்தரின் திடீர்ப் பொதுத்தேர்தல் திட்டம், அண்மையில் ஐ. தே. கட்சியிலிருந்து அணிமாறி, அதற்குப் பரிசாக அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட 18பேர் அணியின் வயிற்றில் புளியைக் கரைக்கவும் தவறவில்லை. அணி மாறியதால் இப்போது திரிசங்கு நிலையில் தவிக்கின்றார்கள் அவர்கள்.

திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்று வருமானால் தாம் இதுவரை கொடிகட்டிப் பறந்த ஐ. தே. கட்சியில் தமக்கு இடமே வழங்கப்படமாட்டாது என்பதும், ஆளும் தரப்பு வேட்பாளர் பட்டியலில் கெஞ்சிக் கூத்தாடி இடம்பெற்றாலும், அந்தக் கட்சி வாக்காளர்கள், அதுவரை எதிர்த்தரப்பிலிருந்து நேற்று வந்து சேர்ந்தவர்களுக்குத் தமது வாக்குகளை அளித்து அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்க மாட்டார்கள் என்பதும் இந்த அணியினருக்கு நன்கு தெரியும்.

எனவே திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று வருமானால் அவர்களின் அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்பதும் நிச்சயம். 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டமாதிரி' ஜனாதிபதி மஹிந்தரை நம்பி, ஐ. தே. கட்சியைக் கை விட்டு அரசுப் பக்கம் தாவியவர்களின் நிலைமைமாறிவிடும்.

அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஜனாதிபதி மஹிந்தரின், வெற்றிகளுக்குப் பின்னால் இருக்கும் இரகசியத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு ஒரு விடயம் 'பளிச்' செனப் புலப்படும். அது - வாக்குறுதிகளை வாரி வழங்கி, அதன்மூலம் இலக்குகளை அடைவதும், இலக்குகளை எட்டியதும் வாக்குறுதிகளை மறந்து விடுவதுமான 'அரசியல் சாணக்கியத்தில்' கைதேர்ந்தவர் ஜனாதிபதி மஹிந்தர் என்பதுதான்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பௌத்த - சிங்களக் கட்சிகளான ஜே. வி. பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவை எல்லாவற்றுடனும் பல உடன்பாடுகளை எழுத்தில் செய்தார் அவர். அவை எல்லாம் பின்னர் தண்ணீர் மேல் எழுதப்பட்டவை போலாயின.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் தரப்போடும் கூட அவர் ஓர் உடன்பாடு கண்டார் என்றும், அதன் மூலமே தேர்தலை வென்றார் என்றும், வென்ற கையோடு அவர் தம் புத்தியைக் காட்டிவிட்ட காரணத்தினாலேயே அவர் பதவியேற்ற கையோடு தமது பதிலடிக் கைவரிசையைப் புலிகள் காட்டத் தொடங்கினார்கள் என்றும் பேச்சடிபடுகின்றது. ஆனால் அதன் உண்மை, பொய் இனித்தான் அம்பலமாகவேண்டும்.

இதேபோன்றதே, அமைச்சுப் பதவியை ஏற்பதற்காக அரசுப்பக்கம் தாவிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் அனுபவமும் கூட. அரசுப் பக்கம் தாவுவதற்காக அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட எவையுமே பின்னர் செயற்படுத்தப்படவேயில்லை என்பதுதான் அந்த அணிகளின் ஆதங்கம்.

அதுபோலவே, புலிகளுடனான 'ஜெனிவா - 1' அமைதிப் பேச்சுகளின்போது மஹிந்த அரசினால் உடன்பாடு கண்டு எழுத்தில் உறுதியளிக்கப்பட்ட விடயங்கள் பின்னர் செயலுருப் பெறவேயில்லை. அவற்றுக்கு மாறான நடவடிக்கைகளே களத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு உறுதி மொழி வழங்கி, உடன்பாடு கண்டு, வாக்குறுதி தந்த விடயங்களைச் செயற்படுத்துவதில் அதிபர் மஹிந்தரின் கீர்த்திக்கு உள்ள தகைமை உலகறிந்தது.

அதுபோலவே ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து அதிலிருந்து கணிசமான எம். பிக்களை அரசுப்பக்கம் சாயச் செய்தபோதும் இப்போதைக்குப் பொதுத் தேர்தல் எதையும் நடத்துவதற்கு அரசு முற்படாது என்று அவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால், அந்த உறுதிமொழியும் மற்றைய உறுதி மொழிகள் போல காற்றில் பறந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற நிலைமை தான் உருவாகி வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்று பத்து நாட்களுக்குள், மாவீரர் தின உரை ஒன்றை ஆற்றிய விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், ''நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கருதப்படுகிறார்'' - என்று குறிப்பிட்டிருந்தார்.

வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும், பின்னர் அவற்றைப் பொருட்படுத்தாமல் உதாசீனம் செய்து விடுவதுமான மூன்றாம் தர அரசியலின் யதார்த்தத்தைத் தாம் நன்கு புரிந்துகொண்ட யாதார்த்தவாதி என்பதை மஹிந்தர் உண்மையில் தவ்றாமல் நிரூபித்தே வருகிறார்.

# அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கையிருப்பில் தட்டுப்பாடு என்ற மாயையை ஏற்படுத்த வேண்டாம்

## ப.நோ.கூ. சங்கத் தலைவர்களுக்கு அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்14

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு இருப்பில் உள்ளன. எனவே அவற்றுக்குத் தட்டுப்பாடு என்ற மாயையை உருவாக்காமல் உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களை அரசாங்க அதிபர் அறிவுறுத்தினார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தவைர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர்கள், பிரதித் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 12ஆம் திகதிவரை கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு விவரம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### போதியளவு கையிருப்பு

அனைத்துப் ப.நோ.கூ. சங்கங்களிலும் மேற்கொள்ளப்பட்ட இருப்பின்படி மொத்தம் 11 லட்சம் கிலோ அரிசி, 7 லட்சத்து 50 ஆயிரம் கிலோ கோதுமை மா, 7 லட்சத்து 70 ஆயிரம் கிலோ சீனி, 2 லட்சத்து 80 ஆயிரம் கிலோ பருப்பு, 74 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெய், 35 ஆயிரம் பைக்கற் தேங்காய் பால்மா, 6 லட்சத்து 80 ஆயிரம் சவக்காரம் என்பன களஞ்சியங்களில் உள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களைக் களஞ்சியங்களில் வைத்திருந்து தட்டுப்பாடு என்ற மாயையை உருவாக்காமல் அவற்றை உடன் விநியோகிக்குமாறு அரச அதிபர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுத்தார். இந்தச் செயற்பாடுகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்யுமாறும் பிரதேச செயலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

குடாநாட்டில் உள்ள எந்தவொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கதிலும் இதுவரை சீரான விநியோகம் நடைபெறவில்லை என்ற குறைப்பாடும் எடுத்துக் காட்டப்பட்டது.

ப.நோ.கூ. சங்கங்களில் இருப்பு விவரங்கள் சரியான முறையில் பேணப்படவில்லை எனவும் களஞ்சியத்தில் உள்ள சில பொருள்கள் இருப்பு விவரத்தில் காட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

### விலை ஏற்றத்தைத் தவிர்க்கலாம்

அனுமதிபெற்ற தனியார் வர்த்தக நிலையங்களுக்கு கூடியளவு அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதன் மூலம் பொருள்களின் விலை ஏற்றத்தைத் தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் -

அரிசி, மா, சீனி, சவர்க்காரம் போன்ற பொருள்களை அனுமதி பெற்ற தனியார் வர்த்தகர்களுக்கு பிரதேச செயலர்களின் சிபார்சின் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் -

இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட அரிசி தரமற்றதாகக் காணப்படுவதாக இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும் -

கூட்டுறவுச் சங்கங்கள் சீராக இயங்காவிட்டால் அவை கலைக்கப்பட்டு அவற்றுக்குப் புதிய நிர்வாகங்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அந்த நிலைமைக்கு இடமளிக்காமல் சங்கங்களின் தலைமைத்துவங்கள், நிர்வாகங்கள் தமது தவறுகளைத் திருத்தி சீரான முறையில் செயற்படவேண்டும் - என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-8)

# ஆசிரிய ஆலோசகர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

ஆசிரிய ஆலோசகர்களுக்கென ஒரு நிரந்தர சேவையை உருவாக்குமாறும் அவர்கள் எதிர்கொள் ளும் தொழில் ரீதியான குறைபாடுகளை நீக்குமாறும் கோரி அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற் சங்கம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்வி அமைச்சின் இசுருபாய வளாகத்தின் முன்பாக ஆர்ப் பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது. நிரந்தர ஆசிரிய ஆலோசகர் சேவை ஒன்று ஸ்தாபிக்கப்படும் வரை இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என சங்கம் தீர்மானித்துள்ளது - என்றுள்ளது.

# அத்தியாவசியப் பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் காங்கேசனில்

மூவாயிரத்து 650 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள் களுடன் 'மேர்க்ஸ் றுகுணு' கப்பல் கொழும்பில் இருந்து காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந் துள்ளது. இந்தக் கப்பலில் 1000 மெற்றிக் தொன் அரிசி, 594 மெற்றிக் தொன் பால்மா வகைகள், 198 மெற்றிக் தொன் சவர்க்கார வகை கள், 150 மெற்றிக் தொன் கோழித் தீன், பேக்கரிகளுக்குத் தேவையான பொருள்கள் என்பன எடுத்துவரப் பட்டுள்ளன. அவற்றை இறக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-8)

# செய்தியாளர்களுக்குப் பயந்து ஒளித்த இலங்கை அமைச்சர்

பத்திரிகையாளர்களுக்குப் பயந்து சென்னை விமான நிலையத்தில் இலங்கை அமைச்சர் ஓடி ஒளிந்தார். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யது.

இத்தகவலை சென்னைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் அடிக்கடி சுட்டுக் கொன்று வருகின்றனர். இலங்கை இராணுவத்தின் செயலைக் கண்டித்து நேற்றுமுன்தினம் தமிழக அமைச்சர்கள் தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்நிலையில் இலங்கையின் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இலங்கையிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்தார். அவர் எழும்பூரில் உள்ள ஒரு விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வெடுத்துவிட்டு பிற்பகல் 2.40 மணிக்கு விமானம் மூலம் ஐதராபாத் செல்வதாகதிட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கிடையே இலங்கை அமைச்சர் வருவதையறிந்து, பத்திரிகையாளர்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சியினர் விமான நிலையத்தில் கூடினர். அவர், வெளியில் வந்ததும் இலங்கை இராணுவத்தினரால் தமிழக மீன வர்கள் சுட்டுக்கொல்லப்படுவது பற்றி கேள்விகள் கேட்க வேண் டும் என்று தயாராக நின்றனர். இலங்கை அமைச்சரை ஏற்றிச்செல்வதற்குக் காரும், அவரது பாதுகாப்புக்காக மேலும் இரு கார்களும் தயாராக நின்றன. பாதுகாப்பு அதிகாரிகளும் தயாராக இருந்தனர். ஆனால், இலங்கை அமைச்சர் விமானத்தை விட்டு இறங்கியதும், வெளியில்பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் குழுமியுள்ள தகவல் அவருக்கு கிடைத்தது. இதையடுத்து அவர் வெளியில் வரத்தயங்கி விமான நிலைய உட்பகுதியில் உள்ள ஓய்வறையிலேயே நீண்ட நேரம் உட்கார்ந்துகொண்டார். பத்திரிகையாளர்கள் அனைவரும்சென்று விட்டனர் என்று தெரிந்த பின்பு இலங்கை அமைச்சர் ஐதராபாத் செல்வதற்காக உள்நாட்டு விமான நிலையத்துக்கு அவசர அவசரமாக சாதாரண பயணிகளை போல நடந்தே சென்றார். அதன்பின்பு இலங்கை அமைச்சரிடம் பாதுகாப்பு அதிகாரிகள் சென்று பிற்பகல் 2.40 மணிக் குத்தான் உங்களுக்கு ஐதராபாத் விமானம். அதுவரை என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டனர். அதற்கு அவர், 'எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை. உள்ளேயே இருந்து விட்டு ஐதராபாத் செல்கிறேன்' என்று கூறினார்.

- இவ்வாறு சென்னைப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டிக்கு மாறுகிறது நேபாளம்

காத்மண்டு, மார்ச்14

உலகின் ஒரே ஒரு இந்து இராச்சியமெனக் கூறப்படும் நேபாள நாட்டின் அரசமைப்பை அந்நாட்டின் நாடாளுமன்றம் மாற்றி அமைத்துள்ளது.

அதன்படி நேபாளம் ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டி ஆட்சிமுறைக்கு மாற்றப்படுகின்றது.

இந்த மாற்றத்தை செய்வதற்கான தீர்மானம் நேபாள நாடாளுமன்றத்தில் 278 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அதற்கு எதிராக 5 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

நேபாளத்தின் தென்பகுதியிலுள்ள மதேஷி இனமக்கள் நடத்தி வந்துள்ள உரிமைப் போராட்டங்களை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியில் உள்ள தாங்கள், நாடாளுமன்றத்தில் உரிய எண்ணிக்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதில்லை என்றும், பாரபட்சத்துக்கு உட்படுத்தப்படுவதாகவும் மதேஷி இனத்தவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

புதிய அரசமைப்பின் பிரகாரம் தென்பகுதி மக்களுக்குரிய நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். நேபாளத்தின் சனத்தொகைகளில் அரைப் பங்கினர் மதேஷி இனத்தவர்கள் ஆவர். அதேபோன்று புதிய நாடாளுமன்றத்தின் அரைவாசி எண்ணிக்கையினர் மதேஷிகளாகவே இருப்பர்.

புதிய சமஷ்டி அரசமைப்பின் பிரகாரம் மகளிர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை இனக்குழுமத்தினர் ஆகியோருக்கு அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது.

எவ்வாறாயினும் தமது குறிக்கோளும் இலட்சியமும் பூரண சுயாட்சியே என்றும் மதேஷி மக்கள் உரிமைக்கழகம் வலியுறுத்தி உள்ளது. (அ-ப)

# பகீரதனின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலை. மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சிவராஜா பகீரதன் மற்றும் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் சகலருக்கும் ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்து மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி அன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் துணைவேந்தரின் முன்னிலையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மாணவன் சி.பகீதரன் தற்பொழுது மகஸின் சிறைச்சாலையில் எவ்வித விசாரணைகளுமின்றித் தடுத்துவைக்கப் பட்டுள்ளார்.

அவரது விடுதலை தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகமோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரோ உரிய வழிவகைகள் எதனையும் இதுவரை மேற் கொள்ளவில்லை.

அவரும், தன்னுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். தற்பொழுது அவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கின்றமையினால், அவரின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், பல் கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினைக் கண்டித் தும் இன்று அனைத்து மாணவர்களும் தமது வகுப்புகளை பகிஷ் கரித்தனர்.

இவரின் விடுதலை தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதவிடத்து, யாழ். பல்கலைக்கழக நிர்வா கத்தை முடக்கும் போராட்டத் தினை [illegible] நிலைக்குத் தள்ளப்படுவோம் - என்றுள்ளது. (அ-1-4)

# எல்லைதாண்டிச் சென்ற மீனவர்களின் 140 கட்டுமரங்கள் பறிமுதலாகின

குடாக்கடலில் தொழில் செய்வதற்கு படையினர் அனுமதித்த பிரதேசத்திற்கு அப்பால் சென்று, மீன்பிடித்ததாக 140 மீனவர்களது கட்டுமரங்கள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, அவர்களது தொழில் அனுமதிக்கென வழங்கப்பட்ட 'பாஸ்'களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கட்டுமரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 140 மீனவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடலில் தொழில் செய்வதற்குரிய எல்லை நிர்ணயிக்கப்பட்டு, அங்கே வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அதனைத் தாண்டி சம்பந்தப்பட்ட மீனவர்கள், தொழில் புரியச் சென்றதனாலேயே கட்டுமரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-203)

# கைதிகளின் உண்ணாவிரதம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், ஜெயானந்த மூர்த்தி, பத்மநாதன், கனகசபை, சந்திரகாந்தன் தங்கேஸ்வரி, ஈழவேந்தன் ஆகியோர் நேற்று வெலிக்கடை மகஸின் சிறைச்சாலைக்குச்சென்று உண்ணாவிரதிகளைச் சந்தித்தனர்.

### 12 பேர் சேலைன் ஏற்றப்பட்ட நிலையில்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்றபோது 12 கைதிகள் சேலைன் ஏற்றப்பட்ட நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தனர். இவர்களுள் இரண்டு பேர் மயக்க ம் தெளியாத நிலையில் இருந்ததாகவும் அரியநேத்திரன் கூறினார்.

நேற்றுக்காலை பத்துமணி முதல் 11.00 மணிவரை வெலிக்கடை மகஸின் சிறைச்சாலையில் தமிழ் கைதிகளுடன் பேச்சு நடத்தினர்.

''நீதி அமைச்சர் நாடு திரும்பிய பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து அமைச்சருடன் நேரடியாகச் சிறைச்சாலைக்கு கூட்டிவருவதாகவும். அங்கு அமைச்சரின் மூலமாகவே கோரிக்கைகளுக்கான பதிலைப் பெற்றுக்கொடுப்பதாகவும் உண்ணாவிரதிகளிடம் விநயமாகப் பேசினர்.

இதனை ஏற்றுக்கொண்ட தமிழ்க் கைதிகள் தற்காலிகமாகத் தமது உண்ணா விரதப் போராட்டத்தைக் கைவிடுவதாகவும் தமது கோரிக்கைகளுக்கு மூன்று வார காலத்திற்குள் நியாயமான பதில் பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால் மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பிப்போம் என காலக்கெடு விதித்துள்ளனர். இதன்பின்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பால் வழங்கி உண்ணாவிரதப் போராட்டத்தைமுடித்துவைத்தனர். (ஐ - 1)

## நாளை

பங்குனி - 01
வியாழக்கிழமை
15.03.2007
திதி: ஏகாதசி
பி.ப : 04.18
நட்சத்திரம்: உத்தராடம்
முற்பகல் : 11.48
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 07.51 - 09.21
ராகுகாலம் : 01.51 - 03.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்

### 2007 ஆம் ஆண்டிற்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களையும் திருத்துநர்களையும் புதிவு செய்தல்

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவை நிறுவனங்களுக்கும் தேவையான பின்வரும் பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கும் திருத்துவதற்கும் தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்பும் பொது நிறுவனங்கள் மற்றும் தனியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் நிறுவனங்களும் தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம்.

1. அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. சமுர்த்தி முகாமையாளர்கள்
3. அரசாங்க நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள்

அ.பொருள்கள்

1. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
2. பாவனைப் பொருள்கள் (துப்புத்தடி, ஈக்கிள்தடி, தீப்பெட்டி, சவர்க்காரம், விம், காப்பிக், மொப்பர் முதலியன)
3. வைத்தியசாலை பாவனைக்கான துணிவகைகள், சீருடைத் துணிகள்
4. மரத் தளபாடங்கள்
5. உருக்குத்தளபாடங்கள்
6. கட்டடபொருள்கள்
7. மோட்டார்வாகனஉதிரிப்பாகங்கள் (ரயர், ரியூப், பற்றரி உட்பட)
8. நீர் வழங்குபொருள்கள்
9. பிளாஸ்டிக் பொருள்கள்
10. இரும்பு, பித்தளை, கன இரும்புபொருள்கள்
11. மின்சார உபகரணங்கள்
12. இறப்பர் முத்திரைகள்
13. அலுமினியப் பாத்திரங்கள்
14. கணனி இயந்திரம் - அதனுடன் இணைந்த உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
15. நிழற்பட பிரதி இயந்திரம், றோணியோ இயந்திர, தட்டச்சு, தொலைக் காட்சிப்பெட்டி ஆகியனவும் அதற்கான உதிரிப் பாகங்களும் .
16. தொலை தொடர்பு உபகரணங்கள் புறெயெற்றர் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்.

ஆ.சேவைகள்

1. மரத்தளபாடம், உருக்குத் தளபாடம் திருத்தம்
2. மின் உபகரணங்கள், மின் இயந்திரங்கள் திருத்துதல் (மின் பிறப்பாக்கி, குளிர்சாதனப் பெட்டி, மின்மோட்டர், மின்விசிறி போண்றன)
3. கணனி, புறெயெற்றர், நிழற்படபிரதி இயந்திரம்,றோணியோ இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, தொலைத் தொடர்பு சாதன திருத்தம்)
4. மோட்டார் வாகன திருத்தம்
5. மோட்டார்வாகனங்களுக்கான சேவீஸ்
6. அடையாள அட்டை கவரிடல்
7. அச்சுவேலைகள்
8. மோட்டார் மீள முறுக்குதல்
9. மின்கலங்களுக்கு மீளமின்வலுவூட்டல்
10. ஒட்டு வேலைகள்உலோக வேலைகள்

மேற்படி வேலைகளுக்காக தங்களை பதிவு செய்ய விரும்புவோர் உரிய விண்ணப்பத்தினை எமது பணிமனையில் ரூபா 250- பதிவுக் கட்டணமாகச் செலுத்தி படிவத்தைப் பெற்று 30.03.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பதிவு செய்துகொள்ளலாம்.

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்**
பிரதி மாகாண பணிப்பாளர்
சுகாதாரசேவைகள்,
யாழ்ப்பாணம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்* (சி-52195)

# வருஷாப்திக சிரார்த்தம்



## அமரர் ஸ்ரீமதி சோமசுந்தர ஐயர் நாகரத்தினம்மா

மண்ணுலகில் மானுடராய் 10.04.1921

வானுறையும் தெய்வமாய் 14.03.2006

பேரோடும் புகழோடும் பெருமையாய்
வாழ்ந்திட்ட உங்கள் நினைவுகள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எம்
நெஞ்சை விட்டு அகலாது
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஸ்ரீவிசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாகேஸ்வரர்
அருள்புரிவாராக பிரார்த்திக்கிறோம்.

*75/10 செட்டித்தெரு*
*நல்லூர்.* (58781)

தகவல் : மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா கனகம்மா (மண்டைதீவு - 6)



மண்டைத்தீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கனகம்மா நேற்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (இரத்தினம்) அன்பு மனைவியும் கிரிஜா, கிருபா, காலஞ்சென்ற கீதா மற்றும் கவிதா ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலைவீதி, கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்* (58785)

தகவல்:
சி. சிவகுமாரன் (மருமகன்)

# புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:- ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்ட அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ ஜெனிவாவிற்குச் சென்று இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்.

ஜனாதிபதி மூன்று மாத காலத்திற்கு முன்பதாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வுயோசனையைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். ஆனால் இதுவரை அவர் தீர்வு யோசனையை முன்வைக்கவில்லை. இலங்கை அரசு வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வ தாக இருந்தால் அந்த நாடுகளுடன் சுமுகமாக ஒத்துப்போகக்கூடிய சூழலை நாட்டில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மனித உரிமை மீறல்கள் குறித்து அந்த நாடுகளுக்கு இலங்கை அரசு நிச்சயமாகப் பதில் அளிக்க வேண்டும் - என்றார். (அ)

# இலங்கை நிலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் மனித உரிமைகள் தொடர்பான கூட்டம் அரசாங்கத்தினால் கூட்டப்பட்டதுடன், எல்லாப் பகுதி பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளுக்கும் காவல்துறை மா அதிபரினால் மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும்படி கூறப்பட்டுள்ளது.

அரசாங்கம் தொடர்ச்சியாக எடுத்து வரும் நடவடிக்கைகளில் இது ஒரு பகுதியாகும். எனது தலைமையில் உள்ளக அமைச்சரவை குழு ஒவ்வொரு மாதமும் கூடி மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், அதனை நிவர்த்தி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்தொடர்பாகவும்ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுண்டு - என்றார். இதனிடையே ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் லூய்ஸ் ஆபர் தனது ஆரம்ப உரையில், மனித உரிமைகள் சபை ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகளின் மேம்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து அந்த நாடுகளை விடுவிப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க உள்ளதாகவும் ஒவ்வொரு நாடுகளுடனும் மனித உரிமைகள் சபை இது தொடர்பாக நியாய பூர்வமாகவும், பக்கச்சார்பு அற்றும் பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறது.'' - இவ்வாறு கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

''இவ்விடயத்தில் ஐ.தே.கட்சி பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற முறையில் தனது கடமையை- பொறுப்பை - முழுதாக உணர்ந்து செயற்படும். இனவாதப் போக்கோடு பணியாற்றாது. எந்த இனத்துக்கு எதிராக அட்டூழியம், அராஜகம் இழைக்கப்பட்டாலும் - அவை எந்தத் தரப்பினால் இழைக்கப்பட்டாலும் - அவற்றுக்கு எதிராக ஐ.தே.க. குரல் கொடுக்கும். மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான சகல புள்ளி விவரங்களையும் திரட்டி, அடுத்துவரும் நாட்களுக்குள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க ஐ.தே.க. தலைமை தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது. இது தொடர்பாக ஓரிரு நாட்களில் பத்திரிகையாளர் மாநாடு மூலம் தனது உத்தேச நடவடிக்கைகள் பற்றி அறிவிக்க ஐ.தே. கட்சி தீர்மானித் திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# வடக்கு - கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து, அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க மட்டக்களப்பின் தொப்பிகல பகுதியிலும் வன்னியின் மல்லாவிப் பகுதியிலும் வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வன்னியில் செயற்படும் அனைத்து சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் மல்லாவியை தளமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் நாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. தற்போது தோன்றியுள்ள பாதுகாப்பற்ற மோசமான சூழ்நிலையை உணர்ந்து மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்புகளும் நிலைமை மேலும் மோசமடைவதை தடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று அந்த மூத்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

# கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யெல்ல ஆகிய எம்.பிகளும் ஐக்கிய சோசலிச முன்னணித் தலைவர் சிறிதுங்க ஜயசூரியவும் நேற்றுக் காலை ஜேர்மன் தூதுவர் ஜோர்ஜென் வீர்த்தைச் சந்தித்தனர். கொழும்பு மற்றும் வடக்கு - கிழக்கில் நடைபெறும் ஆட்கடத்தல்கள், கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் தூதருக்கு விளக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்மூடித்தனமான குண்டுவீச்சு, ஷெல்வீச்சு காரணமாக லட்சக்கணக்கான தமிழ்மக்கள் பரம்பரையாக வாழ்ந்த இடங்களைவிட்டு வெளியேறி அகதிகளாக இடம்பெயர்ந்து தவிக்கின்றனர். இவர்கள் உண்ண உண வின்றி கழிப்பிட வசதிகளின்றியும், இருப் பிடவசதிகளின்றியும் சொல்லொணா கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிவித்த தூதுக்குழுவினர், சர்வதேசசமூகம் தமது பிரச்சினைகளை தீர்க்க அழுத்தம் கொடுக்குமென தமிழ்மக்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் விளக்கினார்.

மக்கள் கண்காணிப்புக் குழுவினரின் தகவல்களைக் கேட்டறிந்த ஜேர்மன் தூதுவர் இதுவிடயம் தொடர்பாக இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் விளக்குவதாகத் தெரிவித்தார் என்று கூட்டமைப்பு எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று கூறினார். (ஐ)


## வெளிநாட்டு விசா

**Russia, Belarus, Cyprus ஆகிய நாடுகளில் மருத்துவம் உட்பட ஏனைய துறைகளுக்கு பல்கலை அனுமதியும் Work permitஉம் விசாவும் பெற்றுத் தரப்படும். விசா பெற்றுத்தந்த பின்னர் கட்டணம் பெறப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.**

தொடர்புகளுக்கு: 22.03.2007 வரை நேரில்
மன்மதன், 03, கலாசாலை வீதி,
திருநெல்வேலி. T.P 0775487201
(58775) பின்னர் 00375298682103


## இதயம் நெகிழும் இறுதி அஞ்சலி

மாணவர்கள் அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமான எமது விஞ்ஞான பீட உத்தியோகத்தர் திருமதி கருணேஸ்வரி பிருந்தாபன் அவர்களது அன்புக் கணவரும் எமது பல்கலைக்கழக ஊழியருமான

### பரந்தாமன் பிருந்தாபன்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் தோய்ந்து கொள்கின்றோம்.

சாந்தி ! சாந்தி! சாந்தி!

(58780) விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்

# மரண அறிவித்தல்கள்

## கந்தர் வைத்திலிங்கம்

**(மணியகாரன் சங்கிலி வைரவர் ஆலய முகாமையாளர்)**



பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் வைத்திலிங்கம் நேற்று (13.03.2007)செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2007)புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*அச்சுவேலி.* (58777)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லப்பா சேனாதிராசா



பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் செல்லப்பா சேனாதிராசா 12.03.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நொத்தாரிசு செல்லப்பா சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகனும் ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சின்னாச்சிப் பிள்ளையின் அன்பு மருமகனும் சாந்தினி (லண்டன்), சுபேந்தினி (லண்டன்), ராகினி (கிராம சேவையாளர், பளை), சுலோஜினி (அமெரிக்கா), மாலினி (புத்தளம்), பவதாரனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற பிரதி அஞ்சல் மா அதிபர் - லண்டன்), கலாநிதி ஆறுமுகம் (லண்டன்), இராமலிங்கம் (கோட்டக்கல்வி அதிகாரி, பளை), Dr.றோகான் (அமெரிக்கா), நடராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், புத்தளம்), ஜெயபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் இந்திரஜித் (கனடா), Dr.சுபேந்திரஜித் (மானல்ல), நரேந்திரஜித் (பொறியியலாளர்), டினேந்திரஜித் (லண்டன்), Dr.விமோசன், ஆதிசன் (லண்டன்), றஜேன் (லண்டன்), நிசான் (மருத்துவக் கல்லூரி-சீனா), சங்கீதா (ஜேனலிசம்), ஜொனாத்தன் (அமெரிக்கா), பிரியானந் (பொறியியலாளர்), தயோமி (புத்தளம்), ஆர்னல்ட் (ஹொட்டல் மனேஜ்மன்ட் - கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (15.03.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நல்லூர் செம். ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லூர் செம். ஜேம்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*278, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (58783)

தகவல்:
சி.இராமலிங்கம். (மருமகன்)
(கோட்டக்கல்வி அதிகாரி)

## பெல்டானோ லெளறன்சியா மரியசெல்வம்

நவாலியைச் சேர்ந்த பெல்டானோ லெளறன்சியா மரியசெல்வம் 12.03.2007 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற E.M. யோசவ் மற்றும் ஜெயசீலிபுனிதமலர் தம்பதியரின் அன்பு மகனும் ஜெசீக்காவின் பாசமிகு கணவரும் அன்போன்ஸ் மரியசெல்வம், பப்ரீசன் யூட் மரிய செல்வம், எமறன்சியா மரிய கமலம், கஜசினத் மரியபாக்கியம், ஐறின் மரியறோஸ், யஸ்ரின்-பேனாட் மரியசெல்வம் (ஆசிரியர், அராலி கிழக்கு அ.மி.த.க.பா), கத்தறீன் மரிய கொறற்றி (ஆசிரியர், பாலசுப்பிரமணிய வித்தியாசாலை - ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற கார்மலா மரியபவனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயசீலன், தவச்செல்வநாயகி, சிவசெல்வநாதன், அன்ரன் ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் சாள்ஸ், எனோச், எமில்டன், றொசாயினி, றொசாளினி ஆகியோரின் சிறிய தந்தையும் டென்சில், டிலக்ஷன், டிலோசன், டெனியூல்டன், பிராங்கிளின், பிளேமிங், ஏஞ்சலா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு புனிதர்கள் பேதுறுபாவிலு ஆலயத்தில் நாளை (15.03.2007) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருப்பலியின் பின் பூதவுடல் புனித பேதுறு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*நவாலி தெற்கு, மானிப்பாய்.* (58788)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்வி காசிலிங்கம் சார்மதி



கைதடி, தச்சன் தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி காசிலிங்கம் சார்மதி 10.03.2007 அகாலமரணமானார்.

அன்னார் காசிலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் அமரர்களான அம்பலவாணர் தம்பதியரினதும் சரவணை மேற்கு வரதகாளி கோயிலடியைச் சேர்ந்த வை.பரமலிங்கம் - அமரர் யோகம்மா தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் வேல்வேந்தன் (பெல்ஜியம்), வேல் அழகன், பிரசன்னா, நிலானி ஆகியோரின் சகோதரியும் திரு. திருமதி சோதிலிங்கம் - கலாநிதி (கனடா), திரு. திருமதி பஞ்சலிங்கம் - சுவர்ணா (சுவிஸ்) ஆகியோரின் மருமகளும் தக்ஷாயினி, கிஷாந்தன், நிசானி, விஷ்ணுகோபன், துவாஸ்கரன், மதுஸ்கரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2007) முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் பிணமுருங்கை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தச்சன் தோப்பு,*
*கைதடி.* (58782)

தகவல்:
அ. காசிலிங்கம் (தந்தை),
க. அன்னலட்சுமி (தாய்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org